**செய்தி வெளியீடு எண்:237** **நாள்: 26.04.2017**

## செய்தி வெளியீடு

### “தொழில் முனைவோர்களுக்கான கணினி கட்டுபாடுடனான மில்லிங் (அ) டர்னிங் இயந்திரங்கள்” (CNC)

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) கிண்டி சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு 2013–2014 ஆம் ஆண்டில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) அறிவித்தது. இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 2606 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும் பிரதமரின் சுய வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகியவற்றின் வாயிலாகவும் பல்லாயிரம் தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 2013ல் அறிவித்துள்ள NEEDS திட்டம் வழியாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர் பயன்பெற்று வருகின்றனர். தொழில் முனைவோர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமானது TVS பயிற்சி மற்றும் சேவை நிறுவனத்துடன் இணைந்து **“தொழில் முனைவோர்களுக்கான கணினி கட்டுபாடுடனான மில்லிங் (அ) டர்னிங் இயந்திரங்கள்” (CNC)** பற்றி பயிற்சி நடத்தவுள்ளது.

TVS பயிற்சி மற்றும் சேவை நிறுவனமானது (TVS-TS) ஒரு நூற்றாண்டு காலமாக தொழில் துறையை சார்ந்த பல்வேறு விதமான பயிற்சிகளை அளித்து ஊழியர்களின் திறமை மற்றும் உற்பத்தி திறன்களுடன் கூடிய தொழில் நுட்ப நிபுணர்களை உருவாக்கியுள்ளது. இப்பயிற்சி TVS பயிற்சி மற்றும் சேவை மையம், எண்: 7/9,MTH ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை என்ற விலாசத்தில் நடைபெற உள்ளது. கணினி கட்டுபாடுடனான மில்லிங் (அ) டர்னிங் இயந்திரங்கள் (CNC Machines) தொழில்நுட்பம் பயன்படுத்தி சிறு தொழில்கள் அமைக்க விரும்பும் அல்லது விரிவுப்படுத்த எண்ணும் தொழில் முனைவோர்களுக்கு இவ்வியந்தரங்களின் வகைகள்,

தொழில்நுட்பம், குறை–நிறைகள், பாரமரிப்பு மற்றும் மூலம்தன செலவு ஆகியவற்றை பற்றி விளக்குவதே இப்பயிற்சியின் நோக்கமாகும். ஒரு பயிற்சி வகுப்பில் அதிகபட்சம் 20 பங்கேற்பாளர்களே அனுமதிக்கப்படுவர். காலை 9.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை 2

நாட்களுக்கு (03.05.2017 & 04.05.2017) பயிற்சி நடைபெறும். இப்பயிற்சிக்கான கட்டணத்தை தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் செலுத்துவதால், இப்பயிற்சி முற்றிலும் இலவசமானதாக அளிக்கப்படும்.

இப்பயிற்சிக்கான தகுதி, டிப்ளமோ / டிகிரி –ல் இயந்திரவியல் பொறியியல் (அ) உற்பத்தி பொறியியல் (அ) வாகன பொறியியல் பிரிவில் பட்டம் பெற்றவராகவும் CNC இயந்திரங்களை பயன்படுத்தி தொழில் அமைக்க எண்ணுவோர் அல்லது தற்போதைய தொழிலில் CNC இயந்திரங்களை உபயோகிக்க எண்ணுபவராக இருக்க வேண்டும். இப்பயிற்சியில் சேர விரும்பும் தொழில் முனைவோர்கள் தங்கள் பெயரை தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இணையதளம் (www.editn.in) (அ) அலுவலகத்தில் 28.04.2017 –ம் தேதிக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்ய பயிற்சி ஒருங்கிணைப்பாளர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மின்னஞ்சல்: tc4@editn.in தொலைபேசி எண்: 22252081 / 22252082, 8754598984 (வேலை நாட்களில் காலை 10.00 முதல் மாலை 6.00 மணி வரை) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**